# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காஞ்சிபுரம் பிரிவு அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தான் தன்னுடைய நிலத்தினை DTCP அப்ருவலுக்கு சமர்ப்பித்தாகவும், அந்த கோப்பு காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட பதிவாளர், பார்வைக்கு வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்ய வந்ததாகவும், அதனை சரி செய்து தர அணுகியபோது காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட பதிவாளர் அலுவலக உதவியாளர் திரு.சதீஷ் என்ற சதீஷ்குமார், வழிகாட்டி மதிப்பை சரி செய்து தரவேண்டுமெனில் தனக்கு ரூ.50,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும், மேற்படி கையூட்டு பணத்தினை தனது அறையில் உள்ள பீரோவில் வைக்குமாறும் கூறியதாகவும், தான் லஞ்சம் கொடுக்க விரும்பவில்லை எனவும், நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 23.12.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது மாவட்ட பதிவாளர் அலுவலக உதவியாளர் திரு.சதீஷ் என்ற சதீஷ்குமாருக்கு கொடுக்க வேண்டிய லஞ்ச பணம் ரூ.50,000/ -த்தை வெள்ளை நிற கவரின் உள்ளே வைத்து அவருடைய அறையில் உள்ள பீரோவில் வைத்தார், மேற்படி லஞ்ச பணத்தினை திரு.சதீஷ் என்ற சதீஷ்குமார், உதவியாளர் எடுத்து அலுவலக உதவியாளர் திரு.பாலாஜியிடம் கொடுத்தார், அந்த கையூட்டு பணத்தினை பாலாஜி தன்னுடைய பாண்ட் பாக்கெட்டில் வைத்திருந்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

# **PRESS NOTE**

The complainant approached the Vigilance & Anti – Corruption, Kanchipuram Detachment, and gave complaint that he applied for DTCP approval for his layout. The file was sent to the District Registrar, Kanchipuram District, to fix the guide line value. For fixing the guide line value Tr.Sathish @ Sathish Kumar, Assistant, Office of the District Registrar, Kanchipuram demanded bribe money of Rs.50,000/- from the complainant. In this connection a case was registered today 23.12.2020 and a trap was organized.

During trap proceedings, Tr.Sathish @ Sathish Kumar, Assistant, Office of the District Registrar, Kanchipuram, instructed the complainant to keep the bribe money in his office bureau. Then the bribe money of Rs.50,000/- was taken by Tr.Sathish @ Sathish Kumar, and given to Tr.Balaji, Office Assistant, who kept the bribe money in his pant pocket. In this connection Tr.Sathish @ Sathish Kumar and Tr.Balaji were arrested.